Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதற்கு
தீர்மானிப்போடு இருங்கள்

உங்கள் ஜெபத்திற்கு
கர்த்தர்
பதிலளிக்க வேண்டும்
என்றும் தீர்மானியுங்கள்



ஜெபிக்கும்போதும்
கர்த்தருடைய சத்தத்தைக்
கேட்பதற்கென்று நேரம்
செலவிடுங்கள்

நீங்கள் கர்த்தரிடமிருந்து கேட்கும்
எல்லாக் காரியங்களும் வேதத்தின் வார்த்தையை
ஒட்டி இருக்க வேண்டும்

நீங்கள் கர்த்தரிடமிருந்து கேட்ட காரியத்தில்
சந்தேகமேதும் இருந்தால்
அதன்படி செயல்படாதிருங்கள்
– கிரப்லோ டாலர்

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

VOL . 4 ISSUE . 2 தனிப்பிரதி ரூ 20/- செப்டம்பர் 2010



# ஆவிக்குரிய சிந்தையும் மாம்சத்துக்குரிய சிந்தையும்

- நிஜா கென்னடி

*அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்.*

*மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.*

*- ரோமர் 8:5,6*

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்கள், இயல்பாகவே அவரை சார்ந்து, ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி வாழ்வார்கள். அவர் விரும்புகிறபடி அவருக்கு பிரியமாய் வாழ்வார்கள். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது பரிசுத்தமாய் வாழ்ந்தார். அதுபோல நாமும் பரிசுத்தமாய் வாழ விரும்புகிறார். நம்முடைய வார்த்தையிலும் செய்கையிலும் மட்டுமல்ல, நாம் சிந்திக்கிற சிந்தனையிலும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். பரிசுத்த எண்ணம் நம் மனது முழுவதும் நிரம்பியிருக்க வேண்டும்.

உங்களை அழைத்தவர், பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் (1 பேதுரு 1:15). ஆவியானவரின் உதவியுடன்தான் நாம் பரிசுத்தமாய் வாழ முடியும். இயேசு கிறிஸ்துவுக்காக வாழ்வேன் என்று உறுதியாக தீர்மானித்தபின், சிலர் வழக்கம் போல, இன்னும் பழைய உணர்வுகளோடு முன்பு அறியாமையினால் செய்து வந்த பாவங்களை மீண்டும் செய்து, பழைய வழிகளுக்கு திரும்பி விடுகிறார்கள். நம் பரலோக தகப்பனைப்போல, நாம் செய்யும் அனைத்து காரியங்களிலும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். பரிசுத்தம் என்பது ஆண்டவரை நேசித்து முழுமையாக அவருக்கென்று நம்மை அர்ப்பணித்திருப்பதாகும். பாவத்துக்கு விலகியிருப்பதாகும். நாம் உலகத்தாருக்கு விலகி, அவர்களைப்போல, இல்லாமல் வேறுபட்டவர்களாக, அவர்களோடு கலவாமல், தனித்தன்மையுள்ளவர்களாக, தேவனுக்கு முதலிடம் கொடுத்து வாழவேண்டும்.நமது கவனம் முழுவதும் அவர் மேலேயே இருக்க வேண்டும். நம் உள்ளார்ந்த மனிதனில் பரிசுத்தம் வேண்டும். தேவனுடைய குணங்களை யுடையவர்களாக நாம் மாறவேண்டும்.

போத்திபாரின் மனைவி, யோசேப்போடு விபசாரம் செய்ய வந்தபோது அவன் அந்த இடத்தைவிட்டே ஓடிப்போனான். மாம்ச இச்சைக்கு அவன் இடங்கொடுக்க வில்லை. கர்த்தருக்கு பயப்படும் பயம் அவனுக்கு இருந்தது. அவன் மாம்ச இச்சைக்கு தன் சிந்தையில் இடங்கொடுத்திருந்தால், பாவத்திற்கு அடிமையாயிருந்திருப்பான்.



## "நம் வாழ்க்கையே வேதாகமத்தில்தான் இருக்கின்றது"

வேதத்தை, கர்த்தரின் வார்த்தையாகப் பாருங்கள். கர்த்தர் தம்முடைய இருதயத்திலுள்ள எல்லா காரியங்களையும் எழுதி நமது கரத்தில் கொடுத்திருக்கிறார். இதை முழுமையாக புரிந்து கொள்ள பரிசுத்த ஆவியினால் நாம் நிரப்பப்பட வேண்டியது அவசியம். அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியினால் நம் இருதயம் நிரப்பப்படுவதே. அந்த அபிஷேகம் வேதத்திலுள்ள சகலவற்றையும் உங்களுக்குப் போதிக்கும் (1 யோவான் 2:20,27).

பரிசுத்த ஆவி என்று சொல்வதை விட பரிசுத்த ஆவியானவர் என்று குறிப்பிடுவதே சரியானது. பரிசுத்த ஆவியானவர், தேவன் மாம்சத்தில் ஒரு மனுஷனாய் இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமியில் இருந்தபோது என்ன பேசினாரோ, அதிலிருந்து எடுத்து நமக்கு போதிப்பார் (யோவான் 14:26, 16:14).

பரிசுத்த ஆவியானவர் சொல்லுவதைத்தான் இப்போது நான் இதோ எழுதிக் கொண்டிருக்கின்றேன். கேளுங்கள், கொடுக்கப்படும் என்றும், கேட்டுக் கொள்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுவான் என்றும், பரிசுத்த ஆவியைக் கேட்டு என்னிடமிருந்து பெற்றுக் கொள் என்றும் கர்த்தர் வாக்கு கொடுத்திருக்கிறார் (லூக்கா 11:9-13). இன்றே, கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள்.

இந்த வேதத்திலிருந்து எப்படி பரிசுத்த ஆவியானவர், என்னுடைய வாழ்க்கையில் உள்ள கேள்விகளுக்கு பதிலளிப்பார் என்று நினைக்கின்றீர்கள். பரிசுத்த ஆவியானவர், வேதத்திலிருந்து ஒவ்வொரு பகுதியை எடுத்து உங்களது வாழ்க்கையில் கடந்த காலத்தில், இப்போது நிகழ் காலத்தில்,இனி உங்கள் வாழ்க்கையில் எதிர் காலத்தில் நடக்கப்போகும் எல்லாக் காரியங்களையும் விவரித்துச் சொல்லுவார். எல்லாவற்றுக்கும் மேலாகக் கர்த்தருடைய சிந்தையை விளக்கமாக சொல்லித் தருவார். கர்த்தர், ஏன் உங்கள் வாழ்க்கையில் இந்த காரியங்களைச் செய்கிறார் அல்லது செய்யவில்லை என்பதை நீங்கள் புரியும்படியாக சொல்லித் தருவார்.

கர்த்தருடைய சித்தமில்லாமல் உங்கள் தலையிலிருந்து ஒரு முடிகூட விழ முடியாது என்று கர்த்தர் சொல்லுவது என்னவெனில், அவர் சித்தமில்லாமல், உங்கள் வாழ்க்கையில் எதுவுமே நடக்க முடியாது. யோபின் வாழ்க்கையை சாத்தான், ஒன்றுமில்லாததைப் போலாக்கினான். ஆனால், கர்த்தர் அனுமதித்த பிறகே சாத்தானால் யோபின் வாழ்க்கையில் குறுக்கிட முடிந்தது (யோபு 1:6-12, 2:4-7). அவ்வளவு போராட்டத்தின் மத்தியிலும் யோபு கர்த்தர்மேல் வைராக்கியமாய் இருந்தான். கிதியோன் கர்த்தரிடம், நீர் என்னோடு இருந்தால், ஏன் இப்படிப்பட்ட எதிர்காரியங்கள் என் வாழ்க்கையில் நடக்கின்றது என்று கேட்டான் (நியாயாதிபதிகள் 6:13). அப்போது கர்த்தர் அவனுக்குச் சொன்னதும், செய்ததும்தான் இன்றைக்கு உங்களுக்கான பதில் : உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா (நியாயாதிபதிகள் 6:14).

கர்த்தருடைய சித்தமில்லாமல் உங்கள் வாழ்க்கையில் எதுவுமே நடக்கவில்லை. இப்போது உங்கள் வாழ்க்கையில் இருக்கும் சூழ்நிலையை அவரால் மாற்றியமைக்க முடியும். முதலாவது முற்றிலுமாக அவரையே சார்ந்து கொள்ளுங்கள். அவரது வார்த்தையை, இரவும் பகலும் தியானியுங்கள். உங்கள் வாழ்க்கை மாறும்.




**உ**ங்கள் வாழ்க்கையில் நடக்கும் காரியங்களைப் பார்க்கும்போது, ஆண்டவர் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறாரா? ஏன் இதையெல்லாம் என் வாழ்க்கையில் அனுமதிக்கிறார்? என்று தோன்றுகிறது அல்லவா? இன்னும் சிலருக்கு, கர்த்தர் என்னோடு இருந்தால் ஏன் இப்படிப்பட்டக் காரியங்கள் என் வாழ்க்கையில் நடக்கின்றது என்று தோன்றுகிறது.

சிலருக்கு, சில நடக்கவேண்டியக் காரியங்கள், நடக்காததைக் குறித்தும், மற்றும் சிலருக்கு சில நடக்கக்கூடாதக் காரியங்கள், நடப்பதைக் குறித்தும் யோசனையாகவும், கேள்வியாகவும் உள்ளது. இவற்றுக்கெல்லாம் பதில் கிடைக்காமல் இருக்கின்றீர்கள்.

தேவனுடைய சித்தமில்லாமல் உங்கள் தலையிலிருந்து ஒரு முடிகூட விழ முடியாது (மத்தேயு 10:29,30). வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள அனைத்தையும் உண்டாக்கின தேவன், தம்முடைய படைப்புகள் எல்லாவற்றைக் காட்டிலும் மனுஷனை மேன்மையானவனாக சிருஷ்டித்திருக்கிறார். தம்முடைய சாயலாக, மனுஷனை உருவாக்கியிருக்கிறார். தம்முடைய படைப்புகள் எல்லாவற்றுக்கும் ஒரு பிரமாணத்தையும் அதனோடேகூட உண்டாக்கியிருக்கிறார். உதாரணத்திற்கு சில காரியங்களைக் குறிப்பிடுகிறேன்: புவியீர்ப்பு சக்தி - ஒரு பொருளை நாம் மேலிருந்து கீழாகப் போடும்போது, அந்தப்பொருள், புவியீர்ப்பு சக்தியினால் ஈர்க்கப்பட்டு கீழேவந்து விழுகின்றது. இந்த புவியீர்ப்பு சக்தி என்ற ஒரு பிரமாணம் இல்லையென்றால், பூமியின்மேல் ஒரு பொருள், ஏன் நாமும்கூட நிற்க முடியாது. மேலிருந்து கீழாக மழை பெய்வதும், ஒரு திசையிலிருந்து மறுதிசை நோக்கி செல்லும் வெளிச்சமும், அவற்றுக்கென்றுள்ள பிரமாணங்களின்படியே இயங்குகிறது.

அதேபோல்தான், மனிதனுடைய வாழ்க்கைக்கும் கர்த்தர், சில பிரமாணங்களை வைத்திருக்கிறார். அதைத்தான் வேதாகமமாக நமது கரத்தில் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு, அநேக கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் வேதாகமத்தைப் படிப்பது என்ற பழக்கமே இல்லாமல் இருக்கின்றது. மற்றும் சிலர் பக்தியாய் இருப்பதற்கான அடையாளம் வேதாகமத்தைப் படிப்பது என்று நினைத்துக்கொண்டு, ஒரு சிறிய பகுதியை மாத்திரம் ஒவ்வொரு நாளும் படிக்கிறார்கள். ஆனால், காரியம் என்னவென்றால், நம் வாழ்க்கையே இந்த வேதாகமத்தில்தான் இருக்கின்றது. அதனால்தான் இந்த உலகத்திற்கு ஞானமில்லாதவன் என்றிருப்பவனும்கூட வேதத்தை நன்கு படித்து, தேர்ச்சி பெற்று அதை போதிக்கும்போது அல்லது பிரசங்கிக்கும்போது, அதை கேட்பவர்களுக்கு அந்த மனுஷனுக்கு எப்படி இப்படிப்பட்ட ஞானம் வந்தது என்று வியப்பாக உள்ளது. இது எப்படி நடந்ததென்றால், எந்த அறிவினால், ஞானத்தினால் கர்த்தர் இந்த உலகத்தையும், பரலோகத்தையும், மனிதனையும் உண்டாக்கினாரோ அவற்றை (கர்த்தரின் சித்தத்தையும், ஞானத்தையும்) அந்த மனுஷன் வேதத்தின்மூலம் தெரிந்து கொள்வதினாலேயே.





யாரும் இல்லாத சூழ்நிலையில், அவன் பாவத்திற்கு இடங்கொடுத்திருக்கலாம். ஆனால், அவன் கர்த்தர்தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வுடன் (ஆவிக்குரிய சிந்தை) இருந்தான். ஆவிக்குரிய சிந்தையுடையவனாக இருந்ததினால் பாவத்தை மேற்கொண்டான். பாவம் செய்வதினால் வரும் குற்றமனசாட்சியும், அதனிமித்தம் வரும் நிம்மதியின்மையையும் மேற்கொண்டான். நாமும் இப்படிப்பட்ட ஆவிக்குரிய சிந்தையை உடையவர்களாக இருந்தோமென்றால், பாவத்தை மேற்கொள்ளலாம். நல்மனசாட்சியையும், அதனிமித்தம் கிடைக்கும் சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆவியின்படி நடக்கிறவர்கள், கர்த்தருடைய வார்த்தைக்கு முழுமையாக கீழ்ப்படிந்து வாழ்வார்கள். மாம்சத்தின் வழிகளில் நடக்கமாட்டார்கள். நம்முடைய வாழ்க்கையில் ஆவியானவருக்கு இடங்கொடுத்தால், நாம் சுயநீதியின் படி நடக்காமல், மாம்சத்தை சார்ந்து, அதின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருக்காமல் இருப்போம். இவர்கள் மாம்சத்திற்குரிய காரியங்களை சிந்திக்காமல், ஆவிக்குரியவைகளையே சிந்திப்பார்கள். அதனால் அவர்கள் உள்ளார்ந்த மனுஷனில் மகிழ்ச்சியாக மனநிறைவோடு வாழ்வார்கள். ஆவியின்படி நடப்பதால் அவர்கள் வாஞ்சைகளையும், விருப்பங்களையும் கர்த்தர் நிறைவேற்றுவார். அவர்களுடைய வாழ்க்கை சமாதானமுள்ளதாக இருக்கும்.

> *தேவனுடைய ஆவி, உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக் குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*
>
> *- ரோமர் 8:9*

நாம், நம் மாம்சம் விரும்புகிறபடி வாழாமல் ஆவியின்படி வாழ்ந்தால், ஆவியானவர் நமக்குள்ளிருந்து, நமக்கு வழிகாட்டி, அவர் விரும்புகிறதை செய்ய வைப்பார். இயேசு கிறிஸ்துவின் ஆவியை பெறாதவர்கள், கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்களல்ல. எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று தேவன் வாக்கு கொடுத்திருக்கிறார். பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக் கொண்டவர்கள், ஆவியானவரால் நிரப்பப்பட விசுவாசத்தோடு ஜெபித்தால் நிரப்புவார். ஆவியானவர் நமக்குள் இருக்கும்போது சாவுக்கேதுவான சரீரம் உயிர்ப்பிக்கப்படும். தேவன், இயேசு கிறிஸ்துவை மரணத்திலிருந்து எழுப்பினார். அவருடைய ஆவி நமக்குள்ளும் இருந்தால் நம் மாம்சத்தின் விருப்பப்படி நடக்கமாட்டோம். ஆவிக்குரிய சிந்தை என்பது நம் உள்ளார்ந்த மனுஷனுக்கு தேவையான சமாதானம், நிம்மதி, இவைகளைக் குறித்து யோசிப்பதாகும்.

மாம்சம் விரும்புகிறபடி வாழ்கிறவர்கள் மாம்சத்திற்குரியவைகளை மட்டுமே சிந்திப்பார்கள். தன் சரீரத்திற்கு வேண்டியவைகளை விரும்பி செய்து கொண்டிருப்பார் கள். ஒருவரது சிந்தனையானது (மனது) பாவத்தால் கட்டுப்படுத்தப்படுமானால், அவன் மரணத்தை அடைவான். மாம்ச சிந்தை என்பது, மாம்ச சரீரம் விரும்புகிற காரியங்களைக் குறித்து யோசிப்பதாகும். ஆவியானரைப் பற்றிய அறிவும், பகுத்தறியும் உணர்வும் இல்லாததினால், ஏற்ற முடிவுகளை எடுக்க முடியாமல் பாவத்தில் விழுந்து போகிறான்.

பாவத்திற்கு பலனாக கிடைப்பது மரணம். மாம்ச சிந்தையுடையவர்கள், பாவத்திற்கு இடங்கொடுத்து, அடிமையாகி பாவத்தால் அடக்கி ஆளப்படுகிறார்கள்.

மாம்சீக எண்ணம் தேவனுக்கு எதிரான பகையாயிருக்கின்றது. அந்த எண்ணங்களும், நோக்கங்களும் உள்ள மனிதன், உலக இன்பங்களில் ஈடுபாடுள்ளவனாயிருப்பான். அவன் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மாட்டான். மாம்ச சிந்தையுள்ளவர்கள் தேவனுக்கு பிரியமாய் இருக்கமாட்டார்கள். அவர்கள் மாம்சத்தின் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு அதனால் வரும் பின் விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் செயல்படுவார்கள். ஒரு காரியத்தை செய்யவேண்டும் என்று திடீரென்று விருப்பம் கொள்வர். இப்படிப்பட்டவர்கள் தேவனை பிரியப்படுத்துகிறவர்களாய், திருப்திபடுத்துகிறவர்களாய் இருக்க முடியாது; அவருக்கு உகந்த எதையும் செய்ய முடியாது.

தாவீது, மாம்ச இச்சைக்கு இடங்கொடுத்து, உரியாவின் மனைவியோடு விபச்சாரம் பண்ணினான் (2 சாமுவேல் *11:14*). அவன், கர்த்தர் தனக்கு எல்லாம் தந்திருந்தும் மற்ற மனுஷனுடைய மனைவியின் மீது இச்சைகொண்டான். தன்னுடைய ஜனங்களின் பாதுகாப்பிற்காக, போர்வீரர்களெல்லாம், போர்க்களத்தில் நிற்பதை நினைத்துப் பார்க்காமல், தன்னுடைய மாம்சத்தை பிரியப்படுத்த நினைத்தான். இந்த மாம்ச சிந்தையே அவனை பாவம் செய்யவைத்தது. ஒரு மனுஷனுடைய எண்ணங்கள் மிகவும் முக்கியம். மாம்சத்துக்கேதுவான காரியங்களையும் யோசிக்கலாம், ஆவிக்கேற்ற (உள்ளார்ந்த மனுஷனுக்குரிய) காரியங்களையும் சிந்திக்கலாம். நமது எண்ணங்கள்தான் பழக்கவழக்கங்களைத் தரும். இந்த பழக்கவழக்கங்களே குணாதிசயமாக மாறிப்போகும். நல்ல எண்ணங்கள் இருந்தால் நல்ல குணமும், நல்ல நடத்தையும் வரும். தாவீது நல்ல எண்ணத்திற்கு இடங் கொடாமல் மற்றவனுடைய வாழ்க்கைக்கு தீமை வருவிக்கக்கூடிய எண்ணத் திற்கு இடங்கொடுத்தான். அவனது எண்ணம்தான் அவனை பாவத்துக்கு நேராக கொண்டு சென்றது. அந்த எண்ணம் அவனை அடுத்தடுத்து பாவங்களை செய்ய வைத்தது. உரியாவின் மனைவியை எடுத்துக் கொண்டது மட்டுமல்லாமல், உரியாவையும் கொலை செய்தான் (முதலாவது மாம்சத்தின் இச்சை, இரண்டாவது கொலை), மாம்ச சிந்தைக்கு நாம் இடங்கொடுக்கும்போது பாவம், நம்மை மேற்கொள்ளும். ஆனால், ஆவிக்குரிய சிந்தையுடையவர்களாய் இருப்போமென்றால், பாவத்தை நாம் மேற்கொள்ளலாம்.



## இயேசுவே வழி

பாவத்திலிருந்து, அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவித்து, மீட்டு எடுக்கவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தார். பாவத்திலிருந்து விலக்கி நம்மை பாதுகாத்துக்கொள்ள இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு தொடர்ந்து அவரில் நிலைத்திருக்க வேண்டும். நாம் நம்மை முழுமையாக அவருக்கு ஒப்புக் கொடுத்து, அவரை தொடர்ந்து பின்பற்றி அவருக்கு பிரியமாய் வாழவேண்டும். அவருடைய வழிகளில் நடக்கும்போது, அது நமக்கு நிலையான சமாதானமான



சம்பந்தமான அமைப்பின் தோல்விகளால் பயம் ஏற்பட்டுள்ளதா? அப்படி இருந்தால், உங்களது முன்னுரிமை தவறானதாகும். படிப்பு நமது இரட்சிப்பு அல்ல. நீங்கள் கவலைப்படுவதற்குப் பதில், கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்காக ஜெபியுங்கள். அரசியலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிகளினால் உங்கள் இருதயம் பாதிக்கப்பட்டுள்ளதா? ஆம் என்பது உங்களது பதிலாக இருப்பின் உங்களது முன்னுரிமை தவறானதாகும். அரசியல் பலம் நமது இரட்சிப்புக்கான வழி அல்ல. இயேசுவே வழி. நமது அரசியல்வாதிகளை விமர்சிப்பதை விட்டுவிட்டு, அவர்களுக்காக நேரமெடுத்து ஜெபியுங்கள். *1* தீமோத்தேயு *2:1,2*-ன்படி நமக்கு மேலே அதிகாரத்தில் உள்ளவர்களுக்காக முதலாவது நாம் ஜெபிக்கவேண்டும். அப்படி நாம் ஜெபிக்கும்போது, நமக்குள் அமைதியும் சமாதானமும் உண்டாகும்.

நாம் கலங்காமல் இருப்பதற்கு நல்ல தீர்மானங்களை எடுத்து, அதில் உறுதியாய் இருக்கவேண்டும். மாற்கு *4:21-24*-ல் இயேசு சொல்கிறார், ''நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்''. நீங்கள் என்ன கேட்கிறீர்கள்? உலகம் முழுவதும் எவ்வளவோ காரியங்கள் வெளியாகின்றன. நீங்கள் என்ன கேட்கிறீர்கள்? பொருளாதார சீர்குலைவைப் பற்றி கேட்கிறீர்களா? வியாதிகளைக் குறித்தும், நோய்களைக் குறித்தும் கேட்கிறீர்களா? யுத்தங்களைக் குறித்தும் கேட்கிறீர்களா? உண்மை என்னவென்றால், நீங்கள் எதைக் கேட்கலாமென்று முடிவு செய்தீர்களோ, அதையே கேட்கிறீர்கள். மாற்கு *4:24*-ஐக் கவனியுங்கள்: ''நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும், கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்'' எதைக் கேட்க முடிவு செய்தீர்களோ, அதையே கேட்பீர்கள்.

நீங்கள் விசுவாசத்தைக் குறித்து யாரிடமாவது பேசுவீர்களென்றால், உங்களை வெறுமனே பார்ப்பார்கள். நீங்கள் பேசுகின்ற எந்த வார்த்தையையும் கேட்கமாட்டார்கள். நீங்கள் இப்போதுள்ள கடினமான காலகட்டத்தைக் குறித்தும், எப்படி காரியங்கள் மோசமாகப் போகின்றது என்பதைக் குறித்தும் பேசுவீர்களென்றால், உடனே அதற்கு பதில் சொல்வார்கள்.

உலகத்தின் கெட்ட காரியங்களைக் குறித்த செய்திகளை என்னை அண்டவிடமாட்டேன். கர்த்தருடைய வார்த்தையும், அவர் என்ன செய்கிறார் என்பதையும் என்னை சுற்றியிருக்கும்படி பார்த்துக் கொள்கிறேன்.

நீங்கள் கேட்கலாம், என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அறியமாட்டீர்களே என்று. யோவான் *16:13*-ன்படி வருங்காரியங்களை முன்கூட்டியே பரிசுத்த ஆவியானவர் சொல்லுவார். அதை நான் விசுவாசிக்கிறேன்.

*24* மணி நேரமும் இந்த உலகத்தில் நடக்கும் காரியங்களை டெலிவிஷன், செய்தி பத்திரிகை, நேரடியோ மூலம் தெரிந்துகொள்ளலாம்.

இந்த உலகத்தின் அழிவின் காரியங்களை வைத்து விசுவாசி எப்படி நடந்து கொள்கிறான் என்பது மிகவும் முக்கியம். கர்த்தரின் வார்த்தை சொல்வதை வைத்து நடக்கவேண்டுமேயொழிய, உலகத்தைப் பார்த்து கலங்கவோ, பயப்படவோ கூடாது. அவரது வார்த்தை மூலம் நாம் அவரிடமிருந்து பெலத்தைப் பெற்றுக் கொள்வோம்.

கொடுங்கள், கொடுப்பவராக இருங்கள். இந்த உலகத்திலிருந்து அல்ல, கர்த்தரிடமிருந்தே பெற்றுக் கொள்கிறீர்கள். உங்களுக்கு பயமோ, கலக்கமோ இல்லை என்பதற்கு இதுவே சாட்சி.

இந்த உலகத்தின் கவலையை வைத்து, வார்த்தை உங்களுக்குள் விளைச்சலைத் தராதபடி தடுப்பதே சாத்தானின் திட்டமாகும். வேதத்தைப் படியுங்கள். உங்கள் பாரத்தைக் கர்த்தர்மேல் வையுங்கள். அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். உலகத்தையும் உங்களையும் ஆளுகை செய்கிறவர் அவரே.

# கர்த்தர் ஆளுகை செய்கிறார்

- கென்னத் கோப்லாண்ட்

www.kcm.org

*யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியது; ஆனாலும், முடிவு உடனே வராது.*

*ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.*

*- மத்தேயு 24:6-7*

எனக்கு சந்தேகமே இல்லை, இயேசு நாம் வாழும் இந்த நாட்களைக் குறித்தே தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார். மிகவும் துல்லியமாக, நம்மைச் சுற்றி அன்றாட வாழ்வில் நடப்பவற்றை சொல்லியிருக்கிறார். நிச்சயமாகவே நாம் மிகவும் கடைசி நாட்களில் இருக்கிறோம்.

இந்தக் காரியங்களையெல்லாம் அவர் விவரமாகச் சொல்லும்போது, ''கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்'' என்று சொல்லுவதைக் கவனிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு யோசனை அல்ல. இது அவரது கட்டளையாகும். நீதிமொழிகள் *4:23*-ஐ உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன், ''எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்''. இயேசு இப்படிப்பட்ட சரியில்லாத நேரத்திலே நம்மால் செய்ய முடியாத ஒரு காரியத்தைச் செய்யச் சொல்வதுபோல தோன்றுகிறது. ஆனால், எப்போதும் நினைவில் கொள்ளுங்கள், விசுவாசிகளாகிய நீங்கள், வார்த்தை சொல்லும் எதையும் செய்ய முடியும். அதை உங்களது சொந்த பலத்தால் செய்ய முடியாது. ஆனால், அதை இயேசு தரும் பெலத்தினால் உங்களால் செய்ய முடியும்.

கலங்காதபடி இருக்க நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்து சற்று தியானிப்போம். முதலாவது, வேதத்தின் வார்த்தையையொட்டி யோசிக்க நேரம் எடுங்கள். இது அவசியம். இந்த உலகத்தின் காரியங்கள் அல்ல, தொடர்ந்து வேதத்தின் வார்த்தைகள் உங்களுக்குள் செல்லவேண்டும். இன்றும் இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்குள் சகலமும் இருக்கின்றது என்பதை நான் கற்றுக் கொண்டேன். சாத்தான் ஆளுகை செய்கிறான் என்று நினைப்பது மிகவும் சுலபம். ஆனால், அவன் ஆளுகை செய்யவில்லை. சாத்தான், அநேக தலையாயக் காரியங்களைச் செய்கிறான், ஆனால், எப்போதும் போர்களை வெல்வது தேவனே.

இதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். உங்களது இருதயத்தை சோதித்துப் பாருங்கள், சமாதானமில்லாமல் இருக்கின்றதா? படிப்பு சம்பந்தமான பள்ளி, கல்லூரி அமைப்பு உங்களுக்கு கலக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறதா? உங்களது இருதயத்தின் ஆழத்தில் படிப்பு



வாழ்க்கையை தரும். பாவத்திலிருந்து வெளியே வர இயேசு கிறிஸ்து நமக்கு வழியுண்டாக்கியிருக்கிறார். அனுதினமும் தேவனை மையமாக வைத்த ஒரு வாழ்க்கையை வாழவேண்டும். எந்த ஒரு காரியத்தை செய்யும் முன்பதாக, அது தேவனுக்கு பிரியமானதா என்பதை விழிப்புணர்வோடு அறிந்து அந்த காரியத்தை செயல்படுத்த வேண்டும். நாம் ஒரு செயலைச் செய்ய தேவன் விரும்புவாரா, என்பதை அறிந்து, அந்த செயலில் ஈடுபட நாம் தீர்மானிக்க வேண்டும். மனுஷனை திருப்திபடுத்த அல்ல, நாம் வாழும் வாழ்க்கை தேவனை திருப்திபடுத்துவதாக இருக்கவேண்டும். வேதத்தை படிப்பதன் மூலம் தேவனுடைய ஆலோசனையை தெரிந்து கொண்டு, அதை பின்பற்றி வாழவேண்டும். ஒவ்வொரு குழப்பமான சூழ்நிலையிலும், இயேசு கிறிஸ்துவை நோக்கி, நாம் என்ன செய்யவேண்டும் என்று கேட்கவேண்டும். அவர் நமக்கு எது சரியானது என்பதை காண்பிப்பார். அதன்படி நாம் நடக்கவேண்டும்.

நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நாம் மாம்ச சிந்தையை உடையவர்களா? அல்லது ஆவிக்குரிய சிந்தையை உடையவர்களா? நாம் மாம்ச சிந்தையை உடையவர்களாக இருந்தால் ஆவியானவரின் உதவியை நாடி இந்த சிந்தனையிலிருந்து விடுபடுவோம்.

*மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.*

*- யோவான் 3:6*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தை (பெயரை) விசுவாசித்து, அவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிற அனைவரும் அவருடைய பிள்ளைகளாகிறார்கள். இயேசு கிறிஸ்துவை நம்பின அனைவரும் அவருடைய பிள்ளைகளாகும்படியான உரிமையை கொடுத்தார். அவர்களுடைய பழைய வாழ்க்கை மாறி, புது வாழ்க்கைக்குள்ளாக கடந்து செல்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்களில், சிந்தைகளில், விருப்பங்களில், நோக்கங்களில் மாறுதல் உண்டாகிறது. இப்படி தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதுதான், தேவனால் பிறப்பது. இவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள் (யோவான் *1:13*). மனிதனாக பிறந்தவர்கள், இப்படி தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதுதான் மறுபடியும் பிறக்கும் (இரட்சிப்பு) அனுபவம் ஆகும். நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது பிதாவாகிய தேவன் நம்மை அவரது பிள்ளைகளாக ஏற்றுக் கொள்கிறார். மறுபடியும் பிறக்காமல், ஆவியானவருடைய அபிஷேகத்தை பெறாமல், அவருடைய வழிநடத்துதலின்படி நடக்காமல், தன் மாம்சம் விரும்புவதை செய்பவர்கள் மாம்ச சிந்தையுடையவர்கள். அழிவில்லாத ஜீவனுள்ள வேத வசனம் மறுபடியும் பிறக்கச் செய்கிறது (1 பேதுரு*1:23*). நம்முடைய பழைய மனுஷன் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டுவிட்டதென்று, நினைவில் வைத்திருந்தால், நாம் பாவத்திற்கு அடிமையாய் இருக்கமாட்டோம். சரீரத்தின் இச்சையின்படி பாவத்திற்கு கீழ்ப்படிய நம்மை அனுமதிக்கக் கூடாது



(1 பேதுரு *1:14*). பாவம் நம்மை ஆளுகை செய்யாதபடி, நமது அவயவங்களை பரிசுத்தமானவற்றை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

மறுபடியும் பிறக்கும் முன்பு, நம் சரீரத்தின் உறுப்புகளை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது நாம் நம் அவயவங்களை பரிசுத்தமானதை செய்ய நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 6:19). நாம் நம் பழைய வாழ்க்கை முறையையும், தீமையை கொண்டு வருகிற கெட்ட சுபாவங்களையும் (பொய், கோபம்) விட்டுவிட வேண்டும். புதிய மனிதனாக மாறவேண்டும். இந்த உலகத்திலுள்ள மக்களைப்போல வாழக்கூடாது. உலக மக்கள் நம்மை புகழ வேண்டும், மதிக்கவேண்டும், உயர்வாக எண்ண வேண்டும் என்ற நோக்கத்தோடு வாழக்கூடாது. கர்த்தர் நம்மை குறித்து என்ன நினைக்கிறார், நாம் வாழ்கிற இந்த வாழ்க்கை கர்த்தருக்கு பிரியமானதாக இருக்கிறதா என்பதை மட்டும் எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கவேண்டும். மனுஷனை பிரியப்படுத்துவதை நிறுத்துங்கள். மாறிப்போகும், பட்சபாதமுள்ள மனுஷனை நம்பாதேயுங்கள். நேற்றும், இன்றும், என்றும் மாறாத பட்சபாதமற்ற கர்த்தரை நம்புங்கள். அவருக்கு பிரியமாய் வாழுங்கள். உலக மக்கள் நேர்மையற்றவர்களாக, சுயநலமுள்ளவர்களாக, ஒழுக்கமற்றவர்களாக இருப்பார்கள்.

உலக மக்களின் நடத்தையை பின்பற்றாமல், அவர்கள் வழியில் நடவாமல், நவநாகரீகத்தை முக்கியமானதாக கருதுகின்ற ஜனங்களின் வழிமுறைகளை பின் தொடராமல், புதிய சூழ்நிலைக்கு தக்கவாறு முழுமையாக நம்மை மாற்றிக் கொள்ளாமல், அசட்டை போக்குடன் நடவாமல்,நம்முடைய இயல்பான சுபாவத்தை மாற்றிக் கொள்ளாமல், இருப்போம். கர்த்தருக்குகந்த மனுஷனாக, மனுஷியாக நாம் உருவாகவேண்டும். நம் எண்ணங்களில், சிந்தனையில், மனப்பான்மையில், நடந்து கொள்கிற முறையில் மாறுதல் வேண்டும். நம் உள்ளார்ந்த மனுஷனில் மாறுதல் வேண்டும். பரிபூரணமான தேவ சித்தத்தையும், தேவனுடைய விருப்பத்தையும் தெரிந்துகொண்டு அதன்படி வாழவேண்டும். தேவனுடைய குணங்கள் நமக்குள் வரவேண்டும்.

ஆண்டவரை அறியாத ஜனங்களின் பழக்க வழக்கங்களின்படி, நாம் செய்யாமல் அவர்களிடமிருந்து, நாம் விலகியிருக்கவேண்டும். எப்போதும் பெருமையோடிருத்தல், பிறருக்கு உரிமையான பொருட்கள் அல்லது செல்வத்தின்மீது தகாத விருப்பம் கொள்ளுதல், மற்றவர்களது தேவைகளை அல்லது விருப்பங்களை கருத்தில் கொள்ளாது, தன்னைப்பற்றி மட்டுமே சிந்தித்தல், தனது திட்டங்களை அல்லது முடிவுகளை மாற்றிக்கொள்ள மறுத்து பிடிவாத குணத்தோடிருத்தல், பிறரை விட தன்னை மேலாகவும் முக்கியமானவராகவும் கருதி தற்பெருமை கொள்ளுதல் ஆகிய மாம்சீகக் குணங்களை நம்மை விட்டு அகற்றவேண்டும். தேவனுடைய வார்த்தையால் மட்டுமே நம் மனதை புதுப்பிக்க முடியும். கர்த்தர் நம் குறைவுகளை நிறைவாக்கி, நமக்கு வழிகாட்டி, நாம் உண்மையான, முழுமையான மாறுதலை பெறும்படி செய்வார். தேவனுடைய வார்த்தை நம்மை வழி நடத்தும். நாம் சிந்திக்கிற சிந்தனைகள் எப்படிப்பட்டவைகள் என்பதை காண்பித்து விடும். நாம் ஆவிக்குரிய காரியங்களை சிந்திக்கவில்லை என்றால், நாம் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள். மாம்சத்துக்குரிய எல்லா சிந்தனைகளிலிருந்தும் விடுபட ஆவியானவருடைய பெலத்தால் நிரப்பப்பட்டு அதிலிருந்து விடுதலை பெறுவோம்.



இஸ்ரவேல் ஜனங்களை எண்ணி கணக்கிட சாத்தான், தாவீதை தூண்டிவிட்டான். தாவீது அதற்கு இடங்கொடுத்து, ஜனங்களை எண்ணி கணக்கிட்டு சொல்லும்படி



எப்போதும் நாம் யோசித்துப் பார்ப்பவர்களாக இருக்க வேண்டும். இதுவே ஆவிக்குரிய சிந்தையின் பரிபூரணமான நிலையாகும். இதையே பிலிப்பியர் 2:5-ல் அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கக்கடவது என்று குறிப்பிடுகிறார். சமாதானத்தின் காரணராகிய கர்த்தரின் சிந்தையை, சித்தத்தை அறிந்து கொண்டு அதன்படி நடப்போமென்றால், நம் ஆவியிலே சமாதானமுள்ளவர்களாயிருப்போம்.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருப்பதாக. மாம்ச சிந்தையை மேற்கொண்டு நல்மனசாட்சியுடனும், சமாதானத்துடனும் இருப்பீர்களாக. ஆமென்!




**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



## ஆவிக்குரிய சிந்தையின் அடையாளம்

ஆவிக்குரியவன், தன்னைச் சுற்றி நடக்கிற எல்லாக் காரியங்களையும் புரிந்து கொள்வான். தன்னை சுற்றியிருக்கிற மனிதர்கள் நடந்து கொள்ளும் விதத்தை பார்த்து, ஏன் அப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்கானக் காரணத்தை அறிந்து கொள்வான். மற்றவர்கள் நம்முடன் உள்ளார்ந்த (இருதயத்திலிருந்து) அன்போடு நடந்து கொள்கிறார்களா என்பதைக் கவனித்துப் பார்ப்பதே ஆவிக்குரிய சிந்தையாகும். அதேபோல நாமும் மற்றவர்களிடம் இயேசு கிறிஸ்துவைப்போல அன்போடு நடந்து கொள்கிறோமா என்பதுவே ஆவிக்குரிய சிந்தையின் அடையாளமாகும். அன்பே, ஆவிக்குரிய சிந்தையின் அளவு கோலாகும். நம்முடைய அன்பு செயற்கையான ஒன்றாக இருக்கக்கூடாது. இருதயத்தின் ஆழத்திலிருந்து வருகிற அன்பாக இருக்கவேண்டும். ஒருவருடைய ஆவிக்குரிய நிலை அல்லது முதிர்ச்சி, அவர்களுடைய அன்பைப் பொறுத்ததே.



சில வேளைகளில் நாம் உண்மையான அன்போடு நடந்துகொள்ளும்போது, அதை மாம்ச சிந்தையுள்ளவர்கள் (உண்மையான அன்பை உணராதவர்கள்) புரிந்து கொள்ளாமல் நம்மைக்குறித்து தவறாக நினைக்கவும் வாய்ப்புகள் உண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலெல்லாம் நாம் அந்த அன்பை நமக்கு தந்த நம் பரம தகப்பன் ஆவிகளின் பிதாவையே நோக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய அன்பையே இந்த பூமியின் ஜனங்கள் அறிந்து கொள்ளாமல் பிசாசுகளின் தலைவன் (பெயல்செபூல்) என்று சொன்னார்கள்; சிலுவையிலும் அறைந்தார்கள். இயேசுவைப்போல நாம் அன்போடு நடக்கும்போதும் இப்படிப்பட்ட பாடுகளை, வேதனைகளை, சிலுவையை சுமக்க வேண்டும். நம் ஆவிக்குரிய நிலைமையை இந்த உலகம் அறிந்து கொள்ளாது. ஆனால், நமக்குள்ளிருக்கிற ஆவிக்குரிய நிலைக்கு காரணராகிய நம் பரம தகப்பன் அறிவார்.

## ஆவியிலே சமாதானம்

சமாதானம் என்பது ஆத்துமாவிலும் (மனதில்) ஆவியிலும் (இருதயத்தில்) இருப்பதாகும். நம் இருதயத்திலுள்ள சமாதானத்தை, சமாதானத்தின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே தரமுடியும். இந்த சமாதானத்தை ஒரு மனுஷனும் நமக்கு தரமுடியாது. மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுவதிலேயே நோக்கமாக இருப்பவர்கள், இதை அறியமாட்டார்கள். இவர்கள் மற்றவர்களுடைய சமாதானத்தைக் குறித்து எண்ணவே மாட்டார்கள். இவர்கள் மற்ற மனுஷர்களுடைய மாம்சத்தையும், மனதையும் பிரியப்படுத்துவதற்காகத் தங்களை சரீரப்பிரகாரமாக மிகவும் வருத்திக் கொள்வார்கள். இவர்களுடைய மாம்சமும், மனதும், விரும்பினதை செய்வார்களேயொழிய கர்த்தருடைய சித்தத்திற்கும், சிந்தைக்கும் அங்கே இடமில்லை. நம்முடைய மனதையும் மற்றவர்களுடைய மனதையும் திருப்திபடுத்துவதைக் காட்டிலும், கர்த்தரை திருப்திபடுத்துவதே முக்கியமாகும். இதுவே ஆவிக்குரிய சிந்தையாகும். இயேசு கிறிஸ்து நம்முடைய இடத்திலிருந்தால், எப்படி சிந்திப்பார், செயல்படுவார் என்பதை



ஆட்களை அனுப்பினான். கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து யுத்தங்களை செய்து வந்த தாவீது, திடீரென்று தன் படைபலத்தின் மீது நம்பிக்கை வைத்தான். அவன் படைத்தலைவனான யோவாப், தாவீதிடம் ஜனங்களை இப்படி கணக்கிடுவது தவறு என்று சொல்லியும் அவன் கேட்கவில்லை. ஜனங்களை கணக்கிடுவதில் உறுதியாயிருந்தான். தாவீது என்ன நோக்கத்தோடு கணக்கிடச் சொன்னான் என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். இந்த காரியம் கர்த்தருடைய பார்வையில் ஆகாதபடியினால், கர்த்தர், இஸ்ரவேலரை கொள்ளை நோயினால் தண்டித்தார். அதனால், எழுபதினாயிரம் பேர் இறந்தார்கள். காத் தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் தாவீதுக்கு எச்சரிக்கை கொடுத்தபோது, தன் பாவத்தை உணர்ந்து கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டான்.

**நம் கரத்தில் எதுவுமில்லை, கர்த்தர்தான் எதையும் நமக்காக செய்வார்**

தாவீது படை பலத்தை அறிந்து கொள்ளும்படியாக மேன்மை பாராட்ட நினைத்தான். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தன்னை, கர்த்தர் தேடி வந்து அபிஷேகித்து, ராஜாவாக உயர்த்தினதை ஒருவிசை எண்ணாமல் போனான். நம் கரத்தில் எதுவுமில்லை, கர்த்தர் தான் எதையும் நமக்காக செய்வார் என்ற எண்ணம் எப்போதும் நம் சிந்தையில் இருக்கவேண்டும். சர்வ லோகத்தையும் சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள தேவன் மாம்சத்தில் இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமியிலே சஞ்சரித்தபோதும், ஒரு அடிமையைப்போல வாழ்ந்தார். தம்மை எவ்வளவு தாழ்த்த முடியுமோ அவ்வளவாக தாழ்த்தினார். தம்மை துன்பப்படுத்தினவர்களிடத்திலும், பரிபூரணமான அன்பை வெளிப்படுத்தினார். ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தையும் காண்பி, மேற்சட்டையைக் கேட்டால், உள்ளங்கியையும், கழற்றிக் கொடு, ஒருமைல் வர பலவந்தம் பண்ணினால் இரண்டுமைல் கூட போ என்று தமது சிந்தையை வெளிப்படுத்தினார். இந்த இயேசு கிறிஸ்துவின் சிந்தையே நம்மிலும் இருக்கக்கடவது.

*ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.*

*மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.*

*- கலாத்தியர் 5:16,17*

இயேசு கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருந்தால், நாம் மாம்சத்தை சார்ந்து, அதற்கு இணங்கி, சுயத்தை திருப்திபடுத்தும்படி வாழமாட்டோம். ஆவியினாலே, சரீரத்தின் தீய செயல்களை மேற்கொள்ளும்போது,பாவத்தின் பலனாகிய மரணத்தை வென்று, நித்திய ஜீவனைப் பெறுவோம். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன், மாம்சத்தினால், அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன், ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்பான் (கலாத்தியர் 6:8).

நம்முடைய வாழ்க்கையில் ஆவியின் கனிகள் வெளிப்பட நாம் வாஞ்சையோடிருக்க வேண்டும். அப்படி ஆவியின் கனிகள் வெளிப்பட்டால், நாம் ஆவியின்படி நடக்கிறவர்களாயிருக்கிறோம். ஆவியானவர் ஒரு குறிப்பிட்ட காரியத்தை

சொல்ல அல்லது செய்ய தூண்டும்போது, நாம் அதைவிட்டு விட்டு, நமது விருப்பங்களையும் கருத்துக்களையும் சார்ந்து இருக்கக்கூடாது. ஆவியானவருக்கு முதலிடம் கொடுத்து, அதை செயல்படுத்த வேண்டுமானால், அவருடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிய வேண்டும். ஆவியானவர் ஒன்றை செய்ய சொல்லி நம்மை தூண்டுவதற்கும், நம் சுய உணர்வுக்கும், கருத்துகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் கவனித்து அறிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொருநாளும் முழுமையாக அவருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் தேவ வார்த்தையை எப்பொழுதும் நாம் மனதில் வைத்திருந்து, நம்முடைய செயல்களில் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் வல்லமை சுயநலமான மாம்சீக விருப்பங்களை கட்டுப்படுத்திவிடும்.

ஆவிக்கு எதிராக மாம்ச இச்சையும், மாம்ச இச்சைக்கு எதிராக ஆவியும் செயல்பட விரும்புகிறது. இவை ஒன்றுக்கொன்று எதிரானவை. ஆகையால் நீங்கள் செய்ய விரும்புவதை உங்களால் செய்ய முடியாது. மாம்சத்திலிருந்து தோன்றும் உணர்வு, மாம்சம் விரும்புகிற முறையில் நடந்து கொள்ள செய்யும். மாம்ச இச்சைகளிலிருந்து விடுபட, மேற்கொள்ள ஒரே வழி பரிசுத்த ஆவியானவர் மட்டுமே. நம் சுயஞானத்தை பயன்படுத்தி தவறான முடிவுகளை எடுத்தால், நாம் விழுந்து போவோம். ஆவியானவர் முழுமையாக ஆளுகை செய்ய நம்மை ஒப்புக் கொடுக்கும்போது மாம்ச இச்சைக்கு விலக்கி நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

> *மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காம விகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே.*
>
> *- கலாத்தியர் 5:19-21)*

தேவனிடமிருந்து நம்மை பிரிக்கும் பாவங்கள் ஏதேனும் நம்மிடத்தில் இருக்கிறதா என்பதை நம்மை நாமே சோதித்து பார்த்து, அதிலிருந்து மனந்திரும்புவோம். தேவன் வெறுக்கும் மாம்சத்தின் பாவ செயல்களை செய்பவர்கள், பரலோகத்துக்கு செல்ல முடியாது. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலாத்தியர் 5:24) நாம் பாவத்தை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பாவத்தை செய்யமாட்டேன் என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும். பாவங்களைவிட்டு மனந்திரும்பும்போது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், அவருடைய நாமத்தினாலும், தேவனுடைய ஆவியினாலும், கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்படுகிறார்கள் (1 கொரிந்தியர் 6:11). பாவ செயல்களுக்கு உடன்படாமல் அதற்கு எதிர்த்து நிற்கவேண்டும். அனுதினமும் வரும் மாம்சீக எண்ணங்களை தேவனுடைய ஆளுகைக்குள்ளாக ஒப்புக் கொடுத்து அவற்றை சிலுவையில் அறைந்துவிடவேண்டும்.

> **மாம்சீக எண்ணங்களை தேவனுடைய ஆளுகைக்குள்ளாக ஒப்புக் கொடுத்து அவற்றை சிலுவையில் அறைந்துவிட வேண்டும்**



இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும் முன்பதாக, கெத்செமனே என்னும் இடத்தில் ஜெபம்பண்ணும்படியாக சென்றார். தாம் அடையப் போகும் மரணத்தை குறித்து துக்கமடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார். மரண நேரம் நெருங்கினவுடன் தாம் எதிர்கொள்ளப்போகும் மரணத்தைக் குறித்தும், தாம் உடலில் துன்புறுத்தப்படப் போவதையும், பிதாவிடமிருந்து தாம் பிரிக்கப்படப்போவதையும், உலகத்தின் பாவத்திற்காக தாம் மரிக்கப்போவதையும் நினைத்து வேதனையடைந்தார். பிதாவை நோக்கி ‘‘என் பிதாவே இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால், நீங்கும்படி செய்யும்; ஆகிலும், என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது’’ என்று ஜெபித்தார். மூன்று தடவை இப்படியாக ஜெபித்தார். மரணத்தினின்று இரட்சிக்க வல்ல பிதாவை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார். வேதனையும், கலக்கமும் மிகுந்த வேளையிலும் கூட இயேசு கிறிஸ்து பிதாவுக்கு கீழ்ப்படிந்து, தன்னை பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். தேவனும் மாம்சத்திலிருந்தபடியாமல் நம்மைப்போல பாடுபடுகிறார், வேதனைப்படுகிறார். ஆனால் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்ததன் மூலம் மாம்சத்தை மேற்கொண்டார். நாமும் அதேபோல பிதாவின் சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும்போது மாம்சத்தை மேற்கொள்ளலாம்.

> **பிதாவின் சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும்போது மாம்சத்தை மேற்கொள்ளலாம்**

சபைக்குள்ளிருந்த விசுவாசிகளில் ஒருவனான அனனியா என்பவனும் அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் நிலத்தை விற்றார்கள். விற்ற பணத்தில் ஒரு பங்கை ரகசியமாக இருவரும் இணைந்து தங்களுக்காக எடுத்து வைத்துக் கொண்டு, ஒரு பங்கை அப்போஸ்தலரிடத்தில் கொடுத்தனர். பேதுரு, அவனிடம் நீ நிலத்தை விற்ற பணத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை ஆள ஏன் அனுமதித்தாய்? நீ மனிதனிடம் அல்ல தேவனிடம் பொய் சொன்னாய் என்று கூறினான். அனனியா இதனை கேட்டபோது, கீழே விழுந்து ஜீவனை விட்டான். அவன் மனைவியும் பொய் சொல்லி ஜீவனை விட்டாள். இருவரும் உண்மையை பேசாமல் பொய் சொல்ல ஒருமனதாயிருந்தார்கள். தேவ மனிதர்களுக்கு முன்பாக மட்டுமல்ல, தேவனுக்கு முன்பாக பொய் சொன்னார்கள். இருவரும் பேராசை கொண்டு ஒரு பங்கை எடுத்துக் கொண்டு விற்ற முழு பணத்தை கொடுத்ததுபோல வெளியே காண்பித்தார்கள். தாராளமனப்பான்மை உள்ளவர்கள் போல தங்களை காண்பிக்க நினைத்தார்கள்.

> *பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டுவழுகி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.*
>
> *- 1 தீமோத்தேயு 6:10*

பாருங்கள் பிரியமானவர்களே, சபைக்குள் இருக்கும் விசுவாசிகள் கூட மாம்சீக எண்ணங்களுக்கு இடங்கொடுத்து விழுந்து போகிறார்கள். பிசாசு பாவம் செய்ய தூண்டினாலும் நாம் மாம்சத்தின் கிரியைகளுக்கு இடங்கொடுக்கக்கூடாது.